

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 33 ★07.07.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

## இலங்கையின் நீதித்துறை ஒருபோதும் நீதியை வழங்காது



திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தை வைத்தியர் மனோகரன் - சிறப்பு நேர்காணல்

## உள்நாட்டு விசாரணை மூலமாக நீதி கிடைக்காது

13 படையினரின் விடுதலை குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை



## எறிகணை சத்தம் கேட்டு ஓடி வந்தபோது

எனது நான்கு பிள்ளைகளும் பிணமாகவே கிடந்தார்கள்.

சுதந்திரபுரம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தை இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்

## போதை ஊட்டு, போர்க் குணம் மறையும், சிங்கள அரசின் சீர்கெட்ட சமன்பாடு - தமிழன்

வன்னிமகன்





## கோத்தாவின் கழிவாளம் அமெரிக்காவின் கையில் ?

பூமிகன்

# உள்நாட்டு விசாரணை மூலமாக நீதி கிடைக்காது என்பதை உணர்த்தியுள்ள இரண்டாவது சம்பவம்

## 13 படையினரின் விடுதலை குறித்து தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

இலங்கை நீதிமன்றங்களில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பது திருமலை மாணவர் படுகொலை தொடர்பாக கைதான சிங்களப் படையினர் விடுதலை செய்யப்பட்டிருப்பதன் மூலம் மீண்டும் ஒரு முறை தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது. "இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையின் மூலமாகவே நீதியை வழங்க முடியும் என்பதையும் இந்தச் சம்பவம்" வெளிப்படுத்தியிருக்கின்றது எனவும் மையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருமலை மாணவர் படுகொலையுடன் தொடர்புபட்டதாக கைதான 13 படையினரும் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"2006 சனவரி 2 ஆம் திகதி திருமலை கடற்கரைப் பகுதியில் வைத்து 5 மாணவர்கள் தலையில் சுடப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர். விசேட அதிரடிப்படையினராலேயே இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டு, 13 படையினர் கைது செய்யப்பட்டிருந்தனர். கைதான படையினர் பின்னர் 2013 இல் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.



படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் மற்றும் உறவுகள் ஆகியோருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர்கள் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாட்டில் புகலிடம் கோரினர். எனினும், மாணவர்களின் படுகொலை தொடர்பில் அவர்களின் பெற்றோர் மற்றும் உறவுகள் நீதி கோரி நீண்ட சட்டப் போராட்டம் நடத்தினர். சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தை மருத்துவர் மனோகரன் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் சாட்சியமளித்திருந்தார்.

திருகோணமலை நீதவான் நீதிமன்ற பிரதான நீதவான் எம். எச். மொஹமட் ஹம்சா முன்னிலையில் கடந்த புதன்கிழமை இந்த வழக்கு கட்டளைக்காக வந்தது. "வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 13 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் மன்று திருப்தியடையும் வகையில் சான்றாதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. அதனால் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 153 மற்றும் 154ஆம் பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சான்றாதாரங்களுடன் முன்வைக்கப்படவில்லை. அதனால் 13 எதிரிகளும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்படுகின்றனர்" என்று பிரதான நீதவான் அவர்களை விடுவித்தார். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டிருப்பது, தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்கு இந்த நாட்டின் நீதிமன்றங்கள் மூலம் தீர்ப்பு கிடைக்காது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றது. முதல் வழக்கில், திருமலை குமாரபுரம் பகுதியில் 1995 ஏப்ரலில் 24 பொதுமக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட வழக்கிலும் ஆறு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம் →

# அகப்பை பிடிப்பதற்கே அருகதை இல்லாத கூட்டமைப்பு நீராவியடிப்பிள்ளையார் பொங்கலில் நீலிக்கண்ணீர் நாடகம்

## காட்டமாக சுட்டிக்காட்டும் தமிழ் புத்திஜீவிகள்

நீராவியடிப்பிள்ளையார் கோவிலில் வரலாற்று சிறப்புமிக்க பொங்கலில் அகப்பை பிடிப்பதற்கே அருகதையற்ற நிலையில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு பானையுடன் வந்து நீலிக்கண்ணீர் விடுத்து அரசியல் நாடகத்தினை அரங்கேற்றிச் சென்றுள்ளதாக தமிழ் புத்திஜீவிகள் பலரும் தமது கடுமையான கண்டனத்தினை வெளியிட்டுள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2015ஆம் ஆண்டு சனவரி எட்டில் பௌத்த சிங்கள பேரனவாத ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டோம் என்று மார்பு தட்டி புதிய ஆட்சிக்கு முண்டு கொடுக்க ஆரம்பித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதன் பின்னர் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் பௌத்த மயமாக்கலும், திட்டமிட்ட நில அபகரிப்பும், குடிப்பரம்பல் மாற்றமும் அதிகமாக நடைபெறுகின்றது. குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் எல்லாம் பௌத்த சின்னங்கள் வைக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டன. அவற்றில் குறிப்பாக செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தினைக் குறிப்பிட முடியும். பல்வேறு போராட்டங்களுக்கு பின்னர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னரும் இப்போது ஒருவாறு பிள்ளையாரை பழையபடியும் வணங்குவதற்கான வழி ஏற்பட்டுள்ளது.

பிள்ளையாரையும், தமிழர்களின் வரலாற்று இடத்தினையும் மீட்கும் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அளித்த பங்களிப்பு என்ன என்று பார்த்தால் ஒன்றுமில்லை. ஆனால் நேற்று நடைபெற்ற 108 பானை பொங்கலில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம் →

# நீதியரசர், சட்டமா அதிபரை வீட்டுக்கு அழைத்து உத்தரவிடும் மைத்திரி

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த சனாதிபதி தேர்தலிலும் வேட்பாளராக களமிறங்குவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதோடு சுதந்திரக்கட்சியையும் மீண்டும் வலுவாக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார்.



இதற்கு அவர் பயன்படுத்தும் ஆயுதம் தற்போது தன்னிடமுள்ள சனாதிபதி என்ற பதவியே ஆகும். இந்நிலையில் தன்னை அரசியலில் ஒதுக்க முனைபவர்கள், தனக்கு எதிராக செயற்படுபவர்கள், எதிர்காலத்தில் தனக்கு எதிராக அரசியலில் களமிறங்க விளைபவர்கள், தன்னுடன் இணைத்துகொள்வதற்கு திட்டமிட்டிருக்கும் அரசியல் தரப்புக்கள் என்பவர்களை குறிவைத்து பல நகர்வுகளைச் செய்கின்றார்.

அதிலொன்றாக, மகிந்த மற்றும் ரணில் தரப்பில் அதிகமாக துள்ளிக்கொண்டிருப்பவர்களை கட்டுப்படுத்தவும், அவர்களுடன் நெருங்கிய உறவுகளை கொண்டு நீதிமன்றத்தில் வழக்குகளை சந்தித்தவர்களுக்கு

தொடர்ச்சி 3ஆம் பக்கம் →

# தமிழ் இளைஞர்கள் கடத்தல் முன்பே தெரியும் அட்மிரல் வசந்த கரன்னகொட



தெகிவளையில் 5 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கிழக்கு கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தனக்கு தெரியுமென முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஒப்புக்கொண்டுள்ளார்.

கொழும்பில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 பேர் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அளித்துள்ள 'பி' அறிக்கையிலேயே இந்த தகவல் கூறப்பட்டுள்ளது. அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே, 5 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து அறிந்திருந்தார் என்பதை அவர் ஒப்புக்கொண்டார் என குற்றப்புலனாய்வுப் பிரிவு அந்த அறிக்கையில் கூறியுள்ளது.அத்துடன், கடத்தப்பட்ட இளைஞர்களைப் பற்றி முதன்முதலில் 2009 மே மாதம் 10ஆம் திகதி அறிவிக்கப்பட்ட போதும் கிழக்கு கடற்படைத் தலைமையகத்தில் இருந்த இளைஞர்களை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு அட்மிரல் கரன்னகொட தவறிவிட்டார் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இதன் மூலம், குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை மறைத்து குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைப் பாதுகாக்க அவர் முனைந்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதென குற்றப்புலனாய்வுப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## நீதியரசர்

எதிராகவும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இதற்காக பிரதம நீதியரசர், ஜயந்த ஜயசூரிய, பதில் சட்டமா அதிபராக கடமையாற்றும் சொலிசிட்டர் ஜெனரல், சனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா ஆகியோரை தனது வீட்டுக்கு அழைத்து யாருக்கு எதிரான வழக்கு விசாரணை கோப்புக்களை உடனடியாக முன்னெடுத்து தீர்ப்புக்களை வழங்க வேண்டும் என்று உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவுகளின் பிரகாரம் தான், எவன்கார்ட் வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டதோடு அடுத்து சிறீலங்கன் எயார்லைன்ஸ், மத்தியவங்கி பிணை முறி விவகாரம், டி.ஏ.ராஜபக்ச அறக்கட்டளை மோசடி, மிக் விமான கொள்வனவு மோசடி உள்ளிட்ட வழக்குகளை வரிசையாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளார் சனாதிபதி மைத்திரி.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## உள்நாட்டு விசாரணை

படையினர் கைதாகியிருந்தனர். 2016 யூலை 27 இல் அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன பிரதிவாதிகளைக் குற்றவாளிகளாக நிரூபிப்பதற்கு போதுமானளவு ஆதாரங்களை முன்வைக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டு, சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டிருந்த ஆறு படையினரையும் விடுதலை செய்தார்.

ஐந்து மாணவர்களும் துப்பாக்கியால் மிகக்கிட்டிய தூரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற சட்ட மருத்துவ பரிசோதனையின் அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 2 மாணவர்கள் நேரடிச் சாட்சிகளாக உள்ளனர். இவர்கள் இருவரும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். 6 சாட்சிகள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றில் சாட்சியமளிக்கவில்லை. இந்தநிலையில், படுகொலையை நிரூபிக்கும் தகுந்த சாட்சிகள் ஆதாரங்கள் இல்லை என்று கூறி சந்தேகநபர்களை விடுதலை செய்திருப்பது நீதியை எதிர்பார்த்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகும்.

இலங்கை நீதிப்பொறிமுறையில், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களுக்கு சிங்களப் படையினர் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பது ஒரு வழமையாக மாறிவிட்டதை இந்த சம்பவம் உணர்த்துகின்றது. இது போர்க் குற்றங்களுக்கு வெளிப்படையான - சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாகவே நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை மீண்டும் ஒரு தடவை உலகத்துக்கு உணர்த்தியிருக்கின்றது" எனவும் ஆய்வு மையம் தெரிவித்திருக்கின்றது.

# நலன்களாலும் நிதியாலும் தீர்மானிக்கப்படும் நீதி


கடந்து செல்கின்ற இந்த வாரமும் பல்வேறுபட்ட விடயங்களை பதிவாக்கி உள்ளது. திருகோணமலையில் 5 மாணவர்கள் 2006இல் அதிரடிப்படையால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் போதிய ஆதாரமில்லை என்று உண்மைக் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டமை, எமது விடுதலை இயக்கம் போதைப்பொருட்களை விற்பனை செய்ததாக சிறீலங்கா சனாதிபதியின் ஆதாரமில்லாத குற்றச்சாட்டு, இறுதி யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் புலிகள் எவரும் தங்களிடம் சரணடையவில்லை என சிறீலங்கா இராணுவம் அறிவிப்பு என பலதரப்பட்ட செய்திகள் கடந்து போகின்றது. அதே வேளையில் தமிழர் மனங்களில் நீங்காத பதிவேற்றம் பெற்றிருக்கின்ற தாம் நேசித்த மக்களுக்காக தங்களின் பௌதீக இருப்பை அழித்து தமிழர் மனங்களில் நிலையான இருப்பைத் தேடிக் கொண்டவர்களின் சிறப்பு நினைவும் யூலை 5 இல் உலகத் தமிழர்களால் கனதியான மனங்களோடு நினைவு கூரப்பட்டது.

எந்தவொரு குறிக்கப்பட்ட சம்பவத்தில் கூட குற்றமிழைத்தவர்கள் தங்களுடையவர்களாக இருந்தால் அவர்கள் தண்டனை பெறாத வகையில் சிறீலங்காவின் நீதித்துறை செயலாற்றி வருகின்றமை வெளிப்படையானது. சம்பவங்கள் இடம்பெறுகின்ற வேளையில் மக்களின் கோபத்தையும் சர்வதேச நெருக்கடியையும் சமாளிக்கும் வகையில் நீதி விசாரணைகளையும் நீதி விசாரணைக் குழுக்களையும் அமைப்பதையும் பின்னர் அவை வேண்டுமென்றே காலத்தால் இழுத்தடிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டும் ஏதோவொரு சாட்டுக்களோடு நீதி மறுக்கப்பட்டும் வருவது தான் இங்கு வரலாறாகிப் போயுள்ளது. தங்களது நலன்களுக்காக நீதியை நீதியாக நடத்தாத ஒரு அரசில் நீதியை எவ்வாறு எதிர்பார்ப்பது. தங்களுக்கான நீதி இங்கு கிடைக்காதென எந்த மக்களும் கருதினால் அது அவர்களுக்கான அரசாகவும் இருக்க முடியாது. சரி உள்நாட்டில் தான் நீதி மறுக்கப்படுகின்றதென்று நாட்டிற்கு வெளியே நீதியை அடைய முயற்சித்தாலும் அது உள்நாட்டுப் பிரச்சனை என கையை விரிக்கும் கைங்கரியமே பதிலாக கிடைக்கின்றது. பயங்கரவாதத்துக்கு எதிரான உலகத்தின் பார்வை என்பது அரச பயங்கரவாதத்துக்கும் எதிரானதாகவே உண்மையில் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய உலக நீதி என்பது நலன்களுக்காகவும் நிதிக்காகவும் எடுக்கப்படுகின்ற நீதியாகவே மாறிப் போயுள்ளது. இந்த சூழமைவில் தமிழர்களுக்கான தேர்வு என்ன? கனவுலகில் சஞ்சரிப்பதையும் எங்களுடைய மக்களிடம் தேடுகின்ற மலின அரசியல் இலாபங்களை கடந்து உண்மையாக தமிழ்த் தேசிய நலனில் அக்கறை கொண்டவர்கள் சரியான பார்வைகளோடு தீர்க்கமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.

எங்களது விடுதலை இயக்கம் தாங்கள் நாளை நாடமைத்து அரசோச்சும் நடைமுறை தமிழீழ அரசை இயக்கி வந்ததால் ஒரு அரசாங்கத்துக்குரிய பார்வைகளோடும் அணுகுமுறைகளோடும் உண்மையான நீதி நிர்வாகத்தோடு இயங்கி வந்ததென்பதை சரியான கண்ணோட்டம் உள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள். நிதி மோசடி, பாலியல் துஸ்பிரயோகம், போதைப் பொருட்கள் விடயத்திலேயே மிகவும் கடுமையாகவும் அதிகபட்ச தண்டனைக்குரிய குற்றமாகவும் இவைகளை கருதி மிகவும். கடுமையாகவும் அந்த விடயங்களில் இருந்தார்கள். இத்தகைய நேர்த்தியானவர்களை போதைப் பொருட்களை விற்பனை செய்தே விடுதலை போராட்டத்துக்காக நிதியீட்டத்தை பெற்றுக் கொண்டார்களென சிறீலங்கா சனாதிபதி குற்றஞ்சாட்டி இருப்பது மிகவும் வேடிக்கையானதும் விசனத்துக்கும் உரியது. எங்களது விடுதலை இயக்கம் சரியான பார்வைகளோடும் நீதியோடும் இயங்காதிருந்திருந்தால் முள்ளிவாய்க்காலின் இறுதிக் காலத்தில் அதன் வெப்பத்தை சிறீலங்கா தாங்கி இருக்காது. தங்களது பௌதீக இருப்பை அழித்து இனத்தின் இருப்பையும் இனத்தின் இலக்கு நோக்கிய பயணத்தையும் தொடர்ந்தவர்களுக்கு மத்தியில் தங்களது இருப்புக்காக இனத்தின் இருப்பையும் தமிழ்த் தேசிய நலன்களையும் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்களை தமிழினம் இனங்காணும் வரை தமிழர்களின் இலக்கு நோக்கிய பயணம் வெற்றி பெறாது.

# போர்க் குற்ற விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்.

## அமெரிக்காவின் உயர் மட்டக் குழுவிடம் விக்னேஸ்வரன் வலியுறுத்தல்



"போர்க் குற்றங்கள் குறித்த பாரபட்சமற்ற விசாரணை ஒன்று நடத்தப்படுவது தமது படையினரது குற்றங்களையும், அதற்கான கட்டளைகளைப் பிறப்பித்த அதிகாரிகளினதும் தவறுகளையும் அம்பலப்படுத்திவிடும் என்பதாலேயே அரசாங்கம் கால அவகாசத்தைத் தொடர்ந்தும் பெறுகின்றது" எனக் குற்றஞ்சாட்டிய, வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்கினேஸ்வரன், "அதனால், போர்க் குற்ற விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ICC) கொண்டு செல்ல வேண்டியது கட்டாயமாகும்" எனவும் வலியுறுத்தியிருக்கின்றார்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறையின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று விக்கினேஸ்வரனை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியது. அமெரிக்க செனட் வெளிவிவகாரக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினரான டாமியன் எப் மேர்பி, செனட் வெளிவிவகாரக் குழுவின் உறுப்பினரான யெல்டா கஸிமி, அமெரிக்க தூதரக அரசியல் பிரிவு பிரதிப் பிரதம அதிகாரி மார்க்கஸ் பி. பார்ப்பென்டர் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தார்கள்.

யாழ் நகரிலுள்ள பிரபல தனியார் விடுதி ஒன்றில் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டமை, வரப்போகும் சனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பது குறித்தும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரான நிலைமைகள் உட்பட பொதுவான அரசியல் நிலைமைகள் குறித்து விக்கினேஸ்வரனின் கருத்துக்களை அமெரிக்க அதிகாரிகள் கேட்டறிந்துகொண்டார்கள். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு அரசியல் தலைவர்களையும், முக்கியஸ்த்தர்களையும் சந்தித்துப் பேசிய அமெரிக்க குழுவினர் இறுதியாக விக்கினேஸ்வரனைச் சந்தித்துப் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பு குறித்து முன்னாள் முதலமைச்சரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு. "இலங்கை அரசாங்கம் கால அவகாசத்தை எடுத்துக்கொள்வது ஐ.நா. பிரேரணையிலுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அல்ல என்பதை நான் அமெரிக்க பிரதிநிதிகளுக்குச் சுட்டிக்காட்டினேன். சிங்கள போர்க் குற்றவாளிகளை அரசாங்கம் தம்மவர்களாகவே பார்க்கின்றார்கள். அவர்களை குற்றவாளிகளாகப் பார்ப்பதில்லை. அதேவேளையில், எமது விடுதலைப் போராளிகளை அவர்கள் தம்மவர்களாகப் பார்ப்பதில்லை. குற்றவாளிகளாகவே பார்க்கின்றார்கள். எமது அன்புக்குரியவர்களை குறிப்பிட்ட ஒரு இடத்தில் குறிப்பிட்ட திகதியில் கையளித்தோம் என யாராவது சொல்லும்போது, பொறுப்புவாய்ந்த ஒரு அரசாங்கம் அவ்வாறு சரணடைந்தவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பது குறித்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பையும், கடமையையும் கொண்டுள்ளது. யாருமே சரணடையவில்லை எனக் கூறும் அவர்கள், பாரபட்சமற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மறுக்கின்றார்கள்.

பாரபட்சமற்ற விசாரணையை முன்னெடுக்க முற்படுவது தமது இராணுவத்தினரதும், கட்டளைகளைப் பிறப்பித்த சிவில் அதிகாரிகளினதும் குற்றங்களை அம்பலப்படுத்திவிடும் என்பதால்தான் அவர்கள் கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அதனால் நாம் போர்க் குற்ற விவகாரத்தையும், ஏனைய விவகாரங்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்குப் பாரப்படுத்துவது அவசியமானதாகும். இரண்டு வருட இறுதியில் மேலும் கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் புதிய கதைகளைச் சொல்லிக்கொண்டு வரும் என்பதை நீங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இந்தக் காலப்பகுதியில் அவர்கள் வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பார்கள். பௌத்த விகாரைகளை அமைப்பார்கள்.




வரப்போகும் சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில், வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையிலான தீர்வு யோசனையை பகிரங்கமாக வெளிப்படுத்துபவருக்கே நாம் ஆதரவளிப்போம். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வுத் திட்டம் குறித்து நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இரண்டு அல்லது அதற்கு மேலான மாகாணங்கள் இணையத்தக்க வகையில் ஒன்பது மாகாணங்களுக்கும் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அநுராதபுரத்தில் சில வருடங்களின் முன்னர் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அனைத்து மாகாண முதலமைச்சர்களும் தமது மாகாணங்களுக்கு சுயாட்சி தேவை என்பதை சனாதிபதி முன்பாகத் தெரிவித்திருந்தார்கள் என்பதையும் அமெரிக்க குழுவினருக்கு நான் சுட்டிக்காட்டினேன்.

சனாதிபதித் தேர்தலில் கோத்தாபாய ராஜபக்ச போட்டியிடுவது தொடர்பாக வெளிவரும் செய்திகளையிட்டும் அமெரிக்க குழுவினர் கேள்வி எழுப்பியிருந்தார்கள். இதற்குப் பதிலளித்த போது, கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்காவில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதனால், அவரது அமெரிக்க பிரசாவுரிமையை மீளப்பெற்றுக்கொள்வதில் சிரமமிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டினேன். அதனால், அடுத்த சனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாத நிலை ஏற்படலாம் எனவும் தெரிவித்தேன். ஏப்ரல் 21 தாக்குதல் சிங்களவர்களின் கண்களைத் திறந்துவிட்டுள்ளது. யார் உண்மையான பயங்கரவாதிகள் (ஐ.எஸ்) யார் உண்மையான விடுதலைப் போராளிகள் (தமிழ்ப் போராளிகள்) என்பதை இப்போதுதான் சிங்களவர்கள் உணர்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதையும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவாக விளக்கிக்கூறினேன்" எனவும் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

## நல்லாட்சியா? நரியாட்சியா? என்ற முழக்கத்துடன் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மட்டக்களப்பில் தமிழ் மக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் போராட்டம் நடைபெற்றது. நேற்று காலை 11 மணியளவில் மட்டு/ காந்தி பூங்கா முன்றலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்கள் நலன் காப்பக செயற்பாட்டாளர்களுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொது செயலாளர் கஜேந்திரன் அக்கட்சியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

# இலங்கையின் நீதித்துறை ஒருபோதும் நீதியை வழங்காது

## திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவனின் தந்தை வைத்தியர் மனோகரன் - சிறப்பு நேர்காணல்

*2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2ஆம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் மனோகரன் ரஜீகர் (பிறந்த திகதி 22.09.1985, அகவை 21), யோகராஜா ஹேமச்சந்திரா (பிறந்த திகதி 04.03.1985, அகவை 21), லோகிதராஜா ரோகன் (பிறந்த திகதி 07.04.1985, அகவை 21), தங்கதுரை சிவானந்தா (பிறந்த திகதி 06.04.1985, அகவை 21), சண்முகராஜா கஜேந்திரன் (பிறந்த திகதி 16.09.1985, அகவை 21) ஆகியோர் கடற்படையின் சோதனைச் சாவடியில் மறித்து வைக்கப்பட்டிருந்த போது அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் மாணவர்களை சரமாரியாக சுட்டுக் கொன்றார்கள்.*

*மகிந்த ராஜபசவின் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டு இந்த சம்பவம் இடம்பெற்றிருந்த போதிலும் பாதிக்கப்பட்ட கடும்பங்களின் கோரிக்கைகள் பல்வேறு போராட்டங்கள், சர்வதேச ரீதியான அழுத்தங்கள் காரணமாக சம்பவம் இடம்பெற்று 7 வருடங்களின் பின்னரே அதாவது 2013 ஆம் ஆண்டே சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகரொருவர் உட்பட 12 பேர் குற்றப்புலனாய்வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.*



*அன்று முதல் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் கடந்த முதலாம் திகதி அன்று அனைத்து குற்றவாளிகளையும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. இந்த தீர்ப்பு குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் உட்பட தாயகத்தில் நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட மனோகரன் ரஜீகரின் தந்தையான (தற்போது லண்டனில் வசித்துவரும்) வைத்தியர் காசிப்பிள்ளை மனோகரன் இலக்கு மின்னிதழுக்கு மின்னஞ்சல் மூலம் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அதன் முழுவடிவம் வருமாறு,*

**கேள்வி:- 2006ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த துன்பியல் சம்பவத்தால் நீதிக்காக கண்ணீருடன் காத்திருந்தபோது தற்போது வழக்கு விசாரணைகள் நடைபெற்ற நிலையில் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி 13படையினர் விடுவிக்கப்பட்டுள்ளமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்- இந்த தீர்ப்பை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இதுவரை எனக்கு எந்த அழைப்பாணையும் அனுப்பப்படாமல் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் விடுதலைக்கான காரணமாக போதிய ஆதரங்கள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. என்னிடம் போதிய அளவு ஆதாரம் உள்ளதால் இந்த தீர்ப்பை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

**கேள்வி:- சிறீலங்கா நீதி என்பதை எதிர்பார்க்க முடியாத ஒரு நாடாகிவிட்டதென்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகி உள்ளது. புதிய உலக ஒழுங்கில் இதற்கான தீர்வாக நீங்கள் எதனை கருதுகின்றீர்கள்?**

பதில்- இலங்கை மீது சர்வதேச நாடுகளின் அழுத்தம் இல்லாதவரை தமிழர்களின் நீதிக்கான விடயங்களில் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டுவரும் என்பதை உலகம் உணரும்வரை எமக்கான நீதி என்பது சாத்தியமற்றது. இதை உலக சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதே எனது கருத்து.

**கேள்வி:- உள்நாட்டிலும் நீதி மறுக்கப்பட்டு சர்வதேச அரங்கிலும் நீதிக்கான பொறிமுறைகள் மிகக் கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில் எங்களைப் போன்றவர்களுக்காக குரல் கொடுக்கக் கூடியவர்கள் யார்? அல்லது உண்மையில் அதற்கான பொறிமுறை இந்த உலகத்திடம் உண்டா?**

பதில்- எமக்காக குரல் கொடுப்பதற்கு பல்வேறு தரப்பினர் உள்ளார்கள். தற்போதைய உலக ஒழுங்கிலும் எமக்கான நீதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. ஆனால் எமது அரசியல் சிவில் சமூகங்களின் வேலைத்திட்டங்கள் பரந்த அளவிலே ஒன்றிணைந்து முழுமூச்சுடன் முன்னெடுக்கும்போது நிச்சயம் என்னைப்போன்ற நீதிக்காக ஏங்கும் அனைத்து தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்கும். இந்த விடயத்திலே சர்வதேச சனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு பொருத்தமான செயற்திட்டங்களை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்தால் எமக்கான நீதியை சாத்தியப்படுத்தமுடியும்.

**கேள்வி:- இந்த வழக்கினை மேல் முறையீடு செய்வதன் ஊடாக இலங்கையின் நீதித்துறைக்குள் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற முடியும் என்று கருதுகின்றீர்களா?**

பதில்- இலங்கையின் நீதிக்கட்டமைப்பு அரசியல் தலையீடு இல்லாமல் சுயாதீனமாக இருந்திருந்தால் நாம் இன்று எமது பிள்ளைகளை இழந்திருக்கத் தேவையில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் தாக்கல் செய்த எந்தவொரு வழக்கிற்கும் நீதி கிடைத்ததாக நான் அறியவில்லை. அதை எமது வழக்கிலும் கண்டுகொண்டேன். ஆகவே மேன்முறையீடு



செய்வதால் எவ்விதமான நியாயத்தினையும் இலங்கையின் நீதித்துறைக்குள்ளே பெற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி :- நீங்கள் சர்வதேச அரங்கிலே பலதரப்பினருடன் இந்த விடயம் குறித்து பேச்சுக்களையும், முறைப்பாடுகளையும், சாட்சியங்களையும் அளித்துள்ள நிலையில் அவர்களின் முயற்சிகள் எவ்வாறு உள்ளன?**

பதில்- உலகநாடுகளின் அழுத்தமில்லாத வரையில் இலங்கை அரசாங்கம் தான் தோன்றித்தனமாகத்தான் செயற்படும் என்பது வெளிப்படையானது. ஆகவே நாங்கள் சந்திக்கின்ற அனைத்து சர்வதேச தரப்புக்களிடத்திலும் அழுத்தங்களை அளிக்குமாறே தொடர்ச்சியாக கோரிக்கை



விடுத்து வருகின்றோம். அவர்களும் அதுதொடர்பில் நடவடிக்கைகளை எடுக்காமலில்லை. எனினும் நாம் மேலும் அழுத்தங்களை வழங்குமாறு தற்போதைய சந்தர்ப்பத்திலும் கோருகின்றோம்.

**கேள்வி :- தாயகத்தில் இருக்கின்ற பாதிக்கப்பட்ட ஏனைய பெற்றோர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று கருதுகிறீர்கள்?**

பதில்- தாயகத்தில் உள்ள பெற்றோர்கள் இன்று எதனையும் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். காரணம் தமது நீதிக்காக நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றபோது முப்படையினரும், புலனாய்வுத்துறையினரும் அவற்றை முடக்குவதற்கே திட்டமிட்டு முயல்வார்கள். நெருக்கடிகளை ஏற்படுத்துவார்கள். ஆகவே அவர்களால் எதனையும் செய்ய முடியாது. புலம்பெயர்ந்தவர்களே பாதிக்கப்பட்ட உறவுகளுக்காக நடவடிக்கைகளை

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# எறிகணை சத்தம் கேட்டு ஓடி வந்த போது எனது நான்கு பிள்ளைகளும் பிணமாகவே கிடந்தார்கள்.

## சுதந்திரபுரம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தை இலக்கு மின்னிதழுக்கு நேர்காணல்

வன்னியில் இரத்தம் சிந்திய கிராமங்கள்தான் இன்றும் வாழத்துடிக்கின்றன. தமிழ் கிராமங்களில் வாழ்கின்ற மக்களிடத்தில் ஒரு கொடூரத்தின் சுவடு அல்லது போரின் வலி உறைந்து போய் இருக்கும் என்பது உண்மை

சுதந்திரபுரம் வெள்ளப்பள்ளம் பகுதியில் வாழ்ந்து வந்த புஸ்பநாதன் இந்திராணி இணையர்கள் நாளாந்தம் கூலித்தொழில் செய்து தங்கள் ஐந்து பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்த வேளை, சிறீலங்கா படையினரின் விமானத்தாக்குதல் எறிகணை தாக்குதல்களில் நான்கு பிள்ளைகளை பறிகொடுத்த ஏக்கத்தவிப்பில் இன்னும் நீதி கிடைக்காமல் காத்திருக்கின்றார்கள்.

தங்கள் பிள்ளைகளுக்கான நீதி கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புடன் உலகத்தினையே நம்பி இருப்பதாகவே கண்ணீர் மல்க தெரிவித்தார்கள்.

**கேள்வி உங்கள் ஐந்து பிள்ளைகளை போரில் இழந்துள்ளீர்கள். அதில் நான்கு பிள்ளைகளை ஒரே இடத்தில் பலிகொடுத்துள்ளீர்கள். அந்த சம்பவம் எப்படி எவ்வாறு நடந்தது?**

பதில் 10.06.19 அன்று நாங்கள் கூலிவேலைக்கு போய் வாறோம் என்று சொல்லிவிட்டு வேலைக்கு சென்று விட்டோம். 1998.06.10 அன்று காலை வேளை மூன்று பக்கங்களிலும் இருந்து எறிகணைத்தாக்குதல்களும் அதாவது மண்கிண்டிமலை அம்பகாம்



ஆனையிறவு போன்ற பகுதிகளில் இருந்து சிறீலங்காப்படையினரின் எறிகணைகள் சுதந்திரபுரம் பகுதியில் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கின. அதே வேளை விமானங்களும் குண்டு மழை பொழிந்தன. இந்த எறிகணைகள் நாங்கள் இருந்த வீட்டுக்கொட்டில் மீது வீழ்ந்து வெடித்துள்ளது. ஆனால் எங்களுக்கு தெரியவில்லை நாங்கள் சிறிது தூரத்தில் உள்ள தோட்டத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டோம். குண்டு சத்தம் எங்கள் வீட்டுப்பக்கமாக கேட்டது என்பது எங்களுக்கு நன்றாக தெரியும்.

உடனே ஓடிவந்து பார்த்தபோது எனது பிள்ளைகள் அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டேன். நான் ஓடி வந்து பார்க்கும் போது எனது மனைவி பதைபதைத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் தலையில் அடித்து குளறியவாறு இருந்தார். மாமரங்கள் முறிந்து எல்லாம் தூக்கி வீசப்பட்ட நிலையில் வீடுகள் அனைத்தும் சேதமான நிலையிலும் எனது பிள்ளைகளை காணாத நிலையில் தேடினேன்.





எனது மூத்த மகன் றமேஸ்குமார் மாமரத்தின் கொப்பு ஒன்றினை பிடித்தபடி நிலத்தில் தொங்கிக்கொண்டு இருந்தான். அவனை கேட்டேன் தம்பி தங்கச்சி ஆட்கள் எல்லாம் எங்கே என்று கேட்டேன். அவன் சொன்னான் இதில் தான் இருந்தவை எங்கே என்று தெரியாது என்று சொன்னவனை தூக்கினேன். அப்போதுதான் தெரிந்தது அவனது காலில் காயம் என்று தூக்கி கொண்டு வந்து பலா மரத்திற்கு கீழ் அவனை கிடத்தி விட்டு மற்ற பிள்ளைகளை தேடிப்பார்த்தேன். உடலங்கள் சிதறுண்டு கிடந்தது. என்னால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. இன்னும் ஒரு பிள்ளையினை காணவில்லை என்று தேடினேன். அப்போது எங்கள் வளர்ப்பு நாய் சிதறுண்டு தூக்கி வீசப்பட்ட எனது மகனின் கையினை வாயில் கௌவிக்கொண்டு வந்து எனக்கு பக்கத்தில் போட்டது. அந்த பிள்ளையினை தேடிப்போனால் அது நீண்ட தூரத்திற்கு அப்பால் வீசிக்கிடந்தது.

என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை . காயமடைந்த எனது மூத்த மகனை அவ்விடத்திற்கு வந்தவர்கள் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

எனது இறந்த பிள்ளைகளை என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அருகில் எவரும் இல்லை சிதறுண்ட பிள்ளைகளை எனது காணிக்குள்ளேயே எடுத்து புதைப்போம் என்று கிடங்கினை வெட்டிய வேளை அருகில் இருந்த மக்கள் வந்தார்கள். அப்போது அன்றைய கிராமசேவையாளர் செல்வநாயகம் அவர்கள் வந்து என்னிடம் சொன்னார் உயிரிழந்தவர்களை இங்கு புதைக்கக்கூடாது. அவர்களை புதைப்பதற்கு நான் ஒழுங்கு செய்கின்றேன் என்றுசொல்லி தூரத்தில் கிடங்கு வெட்டி அடக்கம் செய்தார்கள்.

இதற்கிடையில் நான் எனது மூத்த மகனை காணவில்லை என மருத்துவமனை சென்று பார்த்தேன். எங்கள் வீடுகள் அழிந்த நிலையில் எங்கு செல்வது என்று தெரியாத நிலையில் இருந்தோம்.

**கேள்வி உங்களின் இறந்த பிள்ளைகள் கல்வியில் எப்படி இருந்தார்கள்?**

பதில் எனது மூத்த மகன் றமேஸ்குமார் ஆறாம் ஆண்டு படித்து வந்தார். அவர்தான் இறுதியில் காணாமல்போனவர். எனது இரண்டாவது மகன் சதீஸ் நான்காம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். துடியாட்டம் கொண்டவர். படிப்பில் நல்ல கெட்டிகாரனாக விளங்கினான். விளையாட்டிலும் கெட்டிக்காரன்.

சத்தியசீலன் என்ற எனது அடுத்த மகன் மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தான். அவனும் படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரன். இவர்களுக்கு கீழ் கலைச்செல்வி, தேவநந்தினி என்ற இரு பெண் பிள்ளைகளும் சிறுவர்கள், இவர்கள் அனைவரும் வீட்டில் நின்ற வேளையில்தான் எறிகணை, விமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதன் பின்னர் சிறுக சிறுக கூலிவேலை செய்து வீடு கட்டி வாழ்ந்து வந்த வேளை எங்களுக்கு குழந்தைகள் இல்லாதது இழப்பிலும் இழப்பாக இருந்தது. இருக்கின்ற குழந்தையும் காயமடைந்த நிலையில் ஒரு கால் ஏலாத நிலையில்தான் இருந்தான்.

**கேள்வி போரின் இறுதிக்கட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது நீங்கள் என்ன செய்தீர்கள்?**

பதில் போரின் போது ஏலாத எனது மூத்த மகனையும் கொண்டு பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து பல கஸ்ரங்கள், பசி பட்டிணி, வீடு இல்லை என்று வாழ்வில் மனிதன் அனுபவிக்க முடியாத துன்பங்களை எல்லாம் அனுபவித்தோம்.

மாத்தளன் பகுதியில் அளவில் நாங்கள் இடம்பெயர்ந்து ஏப்ரல் மாதம்

தொடர்ச்சி →

இருந்த வேளை எனது மூத்த மகன் றமேஸ்குமார் சித்திவீட்டிற்கு செல்வதாக சென்றார். இறுதியில் மக்கள் எல்லாம் எழும்பி ஓடுகின்றார்கள். எறிகணை மழையாக பொழிந்தது. அப்போது சித்தி வீட்டிற்கு போனவனை பார்த்து வருவோம் என்று போன போது என்னால் போகமுடியவில்லை. ஏற்கனவே பிள்ளைகளை இழந்திட்டம் எனது மனது கேட்கவில்லை. காலும் ஏலாத பிள்ளை என்ன செய்யிறானோ என்று கொஞ்ச தூரம் போய் பார்ப்பம் என்று சென்றேன் ஆனால் முடியவில்லை. திரும்பி வந்து எங்கள் கொட்டிலில் பார்த்தேன் அங்கு எங்கள் பொருட்கள் எதுவும் இல்லை. அதன் பின்னர் எனது மகனை எல்லோரிடமும் கேட்டேன் விசாரித்தேன் தெரியாது என்றுதான் அனைவரும் பதில் சொன்னார்கள். இன்றுவரை அவனை தேடிக்கொண்டேதான் இருக்கின்றோம்.

நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கு வந்ததன் பின்னரும் காணாமல் போன எனது மூத்த பிள்ளை தொடர்பில் பலர் பதிவு எடுத்தார்கள். ஆனால் 2015 ஆம் ஆண்டு தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் அட்டை வந்தது. காணாமல் போன றமேஸ்குமாரின் பெயருக்கு இன்றும் அவனின் ஆவணங்கள் அனைத்தும் பதிவில் வைத்துள்ளோம்.

**கேள்வி உங்கள் ஐந்து பிள்ளைகளின் இழப்பிற்கு ஒரு நீதி கிடைக்கும் என்று நினைக்கின்றீர்களா?**

பதில் காணாமல் போன எனது மூத்த மகன் பற்றி இதுவரைக்கும் எந்த முடிவும் கிடைக்கவில்லை. எல்லாம் பதிகின்றார்கள் ஆனால் ஒரு பதிலும் இல்லை.

அரசாங்கத்தின் எறிகணை மற்றும் விமானத் தாக்குதலால்தான் எனது மற்ற நான்கு பிள்ளைகளின் உயிர் பறிக்கப்பட்டது. அதற்கு நீதி கிடைக்கவேண்டும்.

இன்று என் ஐந்து பிள்ளைகளும் இருந்திருந்தால் நான் கஸ்ரப்படதேவையில்லை . எனக்கு முள்ளந்தண்டு வருத்தம் என்று ஐந்து பிள்ளைகளை பறிகொடுத்த தந்தை கண்ணீருடன் கூறினார் .

எனது பிள்ளைகளை சொத்தாக ஐந்து முத்துக்களை இழந்தேன். வீடுகளை இழந்தேன். இந்த நிலையில் இருந்து இன்னும் மீளமுடியவில்லை. இப்போதும் வலிகள் ஆழ் மனதில் இருக்கின்றன.

ஆனால் எனது இவ்வளவு சொத்தினையும் இழந்த பின்னர் அரசாங்கம் எனக்கு ஒரு வீட்டுத்திட்டத்தினை கொடுத்துள்ளது. நான்கு பிள்ளைகளும் இறந்து விட்ட நிலையில் எங்களுக்கு அரசிடம் இருந்து தலா 15 ஆயிரம் ரூபாதான் இழப்பீட்டுத்தொகையாக கிடைத்துள்ளது. நாளாந்த கூலிவேலை செய்துதான் எங்கள் குடும்பத்தினை நடத்திக்கொண்டு இருக்கின்றோம்.

நான் ஒரு நிலத்தினை வாடகைக்கு எடுத்து அங்கு பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு அதில் இருந்து வருமானத்தினை பெற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றேன்.

**கேள்வி இங்குள்ள அரசியல்வாதிகள் உங்களுக்கு ஏதாவது செய்தார்களா?**

பதில் அரசியல்வாதிகள் இதனை பற்றி எதுவும் கண்டுகொண்டதாக இல்லை அவர்கள் வாக்கு கேட்க வரும்போது சொன்னார்கள் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருவோம் எல்லாம் செய்து தருவோம் என்று சொன்னார்கள். அது அந்த நேரம் மட்டும்தான். அதன்பின்னர் அவர்கள் வரவில்லை.

வாக்கு கேட்கும்போதுதான் அவர்களை காணமுடியும். அதன்பின்னர் அவர்களை எங்கு சந்திப்பது என்று கூட தெரியாது. வாக்கு கேட்டுவரும் போதே நான் சொல்லியுள்ளேன் இவர்கள் வரும்போது அதனை செய்வோம், இதனை செய்வோம், என்று வருவார்கள் இதுவரை தமிழர்களுக்கு உரியது என்று என்ன நீதியினை காட்டுகின்றீர்கள் இவ்வளவு பிள்ளைகளை இழந்துவிட்டேன் பல இழப்புக்களை சந்தித்துள்ளோம் அவர்கள் இருந்திருந்தால் என் நிலமை என்ன என்று சிந்தியுங்கள்.

இவற்றுக்கெல்லாம் அந்தந்த தேர்தல் காலங்களின் போதே தீர்வு காணுவோம் என்று வருவார்கள் அரசியல்வாதிகள் .

**கேள்வி அடுத்த தேர்தல் வரப்போகின்றது உங்கள் வீட்டிற்கு வரும் அரசியல் வாதிகளுக்கு என்ன சொல்வீர்கள் ?**

பதில் எங்களுக்கு எல்லாம் செய்வோம் என்றுதான் கடந்த காலத்தில் அரசியல் வாதிகள் எங்கள் வீடுதேடி வந்தார்கள். ஆனால் இனிவரும் காலத்தில் நாங்கள் அவர்களுக்கு வாக்களிப்போமா அளிக்கமாட்டோமா என்ற கேள்வி வந்துள்ளது.

என் காணாமல் போன பிள்ளைக்கே ஒரு முடிவினை காணாத நிலையில் மீண்டும் இவர்களுக்கு வாக்குபோடுவது என்பது கேள்விக்குறி என்று மனதில் இருந்த உணர்வினை வெளிப்படுத்தினார்.

எங்களுக்கு அரசியல்வாதிகள் என்னத்தை தந்தார்கள் எமக்கான நீதியினை கூட பெற்றுத்தரவில்லை.

**கேள்வி உங்கள் பிள்ளைகளின் மரணத்திற்கு நீதி கிடைக்கும் என்று நினைக்கின்றீர்களா?**

பதில் எங்களுக்காக உலக நாடுகள் குரல் கொடுத்தால் தான் எங்களுக்கான நீதி கிடைக்கும். கொத்துக் கொத்தாக பிள்ளைகளை இழந்துள்ளோம். இதனை பற்றி அரசாங்கம் நீதி தரும் என்று நம்பவில்லை.

எங்கள் உண்மை நிலையினை உலக நாட்டின் பக்கம் கொண்டு சென்றால் எங்களுக்கான நீதி கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

எங்கள் ஐந்து மலையான பிள்ளைகளை பறிகொடுத்துவிட்டு இந்த அரசாங்கத்திடம் இருந்து எதனையும் எதிர்பார்க்க முடியாது. அரசாங்கம் எதுவும் எங்களுக்கு தரப்போவதும் இல்லை. உலகத்தின் பக்கம் எங்கள் நிலைமையினை எடுத்துரைத்தால் எங்களுக்கான நீதி கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

காணாமல் போன எங்கள் பிள்ளைகள் தொடர்பிலும் எத்தனையோ பிள்ளைகள் கையால் கொடுத்தும் அவர்களுக்கான முடிவு கிடைக்கவில்லை. அரசாங்கத்திற்கு ஊடாக எதுவும் செயற்படுவதாக தெரியவில்லை. எத்தனையோ மக்கள் இன்றும் தங்கள் கையால் கொடுத்த பிள்ளைகளை தேடி முடிவில்லாமல் இருக்கின்றார்கள். இந்நிலையில் நாங்கள் யாரிடம் நீதி கேட்பது என்று தெரியாத நிலையில் இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## அகப்பை பிடிப்பதற்கே

*சேனாதிராஜா, சிறிதரன், சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என்று பானையும், அகப்பையும் கையுமாக சொகுசு வாகனங்களில் அங்கு வந்திறங்கி பொங்கலில் கலந்து கொண்டுவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.*

*இது உண்மையிலேயே மாபெரும் அரசியல் நாடகமாகும். ஏனென்றால் இவர்கள் தொடர்ச்சியாக வரவு செலவுத்திட்டங்களுக்கு வாக்களித்தே வருகின்றார்கள். அதிலும் பாதுகாப்புத்துறைக்கான நிதி அதிகப்படுத்திக்கொண்டு செல்கின்றபோதெல்லாம் அதற்கு ஆதரவளித்தே வருகின்றார்கள். அப்படியென்றால் மறுபக்கத்தில் தாயகத்தில் படையினர் தங்கியிருக்க வேண்டும் என்பது தானே பொருளாகின்றது. அதுமட்டுமன்றி இந்த வரவு செலவுத்திட்டங்களுக்கு வாக்களிப்பதற்கு முன்னதாக ஒரு நிபந்தனையாக தாயகத்தில் அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைகள், சின்னங்களை நிறுத்துமாறு கோரியதே இல்லை.*

*அதேபோன்று, தான் இறுதியாக நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் விகாரைகள் அமைப்பதற்கு இரண்டாயிரத்தி தொளாயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுவதாக கூறப்பட்டிருந்தபோதும் அதனை மறுத்துரைக்காது கை உயர்த்தியவர்கள் தான் இந்த கூட்டமைப்பினர். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் தான், கொக்கிளாயிலும் சரி, செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்திலும் சரி விகாரைகளை முழுமையாக நிர்மாணம் செய்யும் பணிகளும் நிரந்தரமாக தேரர்களை அமர்த்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*அப்படியிருக்க, அப்பாவி மக்களுக்கு இரட்டை வேடம்போட்டு பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தங்களை சித்தரித்ததுடன் நிறுத்தாது கடவுள் சன்னிதானத்தில் வைத்து பானையும் அகப்பையும் கையுமாக வந்து ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றி அடுத்து வரும் தேர்தலில் தமது ஆசனங்களை தக்கவைத்துக்கொள்ள முயற்சிகளை எடுக்கின்றார்கள். கூட்டமைப்பின் இந்த இரட்டைவேட நாடகத்தினை தெளிவாக புரிந்துகொள்வது பிள்ளையாரின் அடியவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தாயகத்தில் வாழும் தமிழ் உறவுகளே என்பதை சுட்டிக் கூறுகின்றோம்.*

# போதை ஊட்டு. போர்க் குணம் மறையும். சிங்கள அரசின் சீர்கெட்ட சமன்பாடு - தமிழன்

**வன்னிமகன்**

1999 ஐப்பசி மாதம் அம்பகாமம் பகுதியில் சிறீலங்காபடையினரால் ''வோட்ட செட்" நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதன் போது இடம்பெற்ற சண்டைகளில் படைத்தரப்பால் பெண்போராளிகளினது வித்துடல்கள் சில கைப்பற்றப்பட்டிருந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் அம்பகாமம் பகுதியில் நின்றிருந்த ஒரு இளநிலை படையதிகாரி, யாழ்ப்பாணத்தில் படையப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் தனது நண்பனான அதிகாரியுடன் நடத்திய உரையாடல் விடுதலைப்புலிகளால் இடைமறிப்புச் செய்யப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பெண்போராளிகளின் உடல்களைப் பார்க்கும் போது தனக்கு மிகுந்த கவலையாக இருப்பதாக அம்பகாமத்தில் இருந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அதற்கு யாழில் இருந்த புலனாய்வுப் படையாளி;

"இதற்காக நீ ஏன்வருந்த வேண்டும். இவர்களை மட்டுமல்ல இந்த இனத்தையே வைக்கக் கூடாது. இவர்களுக்கு இருக்கும் இந்த போராட்ட குணத்தை முதலில் இல்லாதொழிக்க வேண்டும். இவர்களின் சந்ததிக்கே போராட்டகுணம் இருக்கக்கூடாது.

அதற்கான நடவடிக்கைகள் பலேகல்ல ஐயா பொறுப்பாக இருந்த நாட்களிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. நாங்கள் இப்போது போதைப்பொருட்கள், பாலியல் படங்கள் போன்றவற்றை இங்கு பரப்பும் வேலையை செய்துவருகிறோம்....." என அந்த உரையாடல் தொடர்ந்து சென்றது...

"வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனைக்கு அரசாங்கத்தின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலே காரணம்"



என அன்றைய வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார்.

2014இல் பாராளுமன்றில் உரையாற்றிய சுரேஷ் பிரேமசந்திரன் "வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்கு படையினரே காரணம்" என அழுத்தமாகக் கூறியிருந்தார்.

இது போன்றே பல்வேறு தரப்புகளிலிருந்தும் சிறீலங்கா அரசுமீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த கருத்துக்களில் உண்மை இல்லையெனில், இந்த பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சிறீலங்கா



அரசால் அன்றே நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த போதைப்பொருள் விநியோகம் திடீரென வானத்தில் இருந்து இறங்கிய சாபமல்ல. அது எதிரிகளால் இரண்டு சகாப்தங்களாக நன்கு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படும் ஒரு இனவழிப்பு நிகழ்ச்சிநிரல்.

இத்தகைய செய்திகள் பலருக்கு ஆச்சரியத்தை தோற்றுவித்திருக்கக் கூடும். இன்னும் சிலருக்கு இந்தச் செய்தியின் நம்பகத் தன்மை பற்றிய ஐயங்கள் எழவும்கூடும்.ஆனால் இதில் ஆச்சரியப்படவோ ஐயம் கொள்ளவோ எதுவுமில்லை.

இங்கு மட்டுமல்ல. எழுப்பப்படும் உரிமைக் குரல்களை வலுவிழக்கச் செய்யவும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடும் குணாம்சத்தை நீத்துப் போகச்செய்யவும் அடக்குமுறையாளர்கள் போதைப்பொருட்களை ஒரு கருவியாக உபயோகித்தே வந்துள்ளனர்.

இன்றும் அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அந்த நாட்டின் சுதேச மக்கள் அந்த நாட்டு ஆளும் தரப்புகளால் திட்டமிட்டு பரப்பப்பட்ட, பரப்பப்படுகின்ற போதைப் பொருள் பாவனை மற்றும் மதுபானப் பாவனைக்கு அடிமையாகி அழிந்து கொண்டிருக்கிறார்கள். உலகின் அதி கூடிய தற்கொலை விகிதம் அவுஸ்ரேலிய சுதேச மக்களின் மத்தியில் நிலவுகிறது. சனத்தொகையில்03 வீதத்திற்குக் குறைவான கனேடிய சுதேசிகள், கனேடிய சிறைச்சாலைகளில் 19 வீதத்தை நிரப்புகின்றனர்.

இவ்வாறே சிங்கள அரசும் போதையூட்டி தமிழரின் போர்க்குணத்தை அழிக்க கடந்த பல தசாப்தங்களாக முயன்றுவருகின்றது. இதன்மூலம் இனவழிப்பை இலகுபடுத்த முடியுமென்பது அவர்களின் நம்பிக்கை. அது உண்மையானதும் கூட.

இவ்வாறு ஒரு இனத்தை அழித்தொழிப்பதற்காக போதைப்பொருட்களை ஆயுதமாக பயன்படுத்திவரும் கேவலமான ஒரு தேசத்தின் அன்றைய அரசியல்வாதி, இன்றைய சனாதிபதி, போதைப்பொருள் பற்றி இப்போது அதிகம் பேசிவருகிறார். அவரது அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அமைச்சர்கள் மீது கூட போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வரும் நிலையில் தமிழர் தரப்புநோக்கி எந்தவித குற்றஉணர்ச்சியுமின்றி கைநீட்டுகிறார்.

விடுதலைப்புலிகளை தமது படையினர் வெற்றிகொண்டதாக கூறிக்கொள்ளும் சிறீலங்கா அரசு, இஸ்லாமிய பயங்கரவாதத்தை சில நாட்களிலேயே முடித்து விட்டதாக பெருமைப்படும் சிறீலங்கா அரசு வடக்கில் காவாலிக் குழுக்களையும் கஞ்சா கடத்தலையும் முடிவுக்கு கொண்டுவரமுடியாமல் இருப்பது முரண்நகை இல்லையா?

சிங்கள தேசத்தின் கோட்டைகளுக்குள்ளேயே புகுந்து விளையாடிய தமிழர் தேசத்தின் பிள்ளைகள் சிறீலங்கா அரசுபோல குறுக்கு வழிகளில் கீழ்த்தனமாக சிந்தித்திருந்தால்

சிங்கள தேசத்தை போதையில் மிதக்கவிட்டிருக்கமுடியும். இரசாயன குண்டுகளை வெடிக்கச்செய்து பலசந்ததிகளையே அழித்திருக்க முடியும். உயிரியல் போர்முறைமூலம் சத்தமின்றி சாவைக் கொடுத்திருக்கமுடியும் ஆகக்குறைந்தது சிறீலங்காவின் விவசாய பொருளாதாரத்தை வீணடித்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் என்றுமே இவ்வாறான ஈனத்தனங்களில் ஈடுபடவில்லை.

"தமிழ்மக்களின் உரிமைக்காகவே பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் ஆயுதமேந்திப் போராடினார்கள். இறுதிவரை அவர்கள் கொள்கையில் உறுதியாக நின்று போராடி மரணித்தார்கள். அப்படிப்பட்ட விடுதலைப்புலிகளை போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபடுத்தி கேவலப்படுத்த முயல்வது படுமுட்டாள்தனம். விடுதலைப்புலிகளின் காலத்தில் வடக்கில் போதைப்பொருள் விற்பனை கொடிகட்டிப் பறக்கவில்லை. போர் நிறைவுக்கு வந்த பின்னர்தான் வடக்கில் போதைப்பொருள் பாவனையும், விற்பனையும் தலைவிரித்தாடுகின்றது".

இவ்வாறு மைத்திரியின் கூற்றுக்கு காட்டமாக மறுப்புத்தெரிவித்திருப்பது ஒரு தமிழரோ அல்லது தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவாளரோ அல்ல. விடுதலைப்புலிகளை பல சமர்களில் எதிர்கொண்ட சிறீலங்காவின் முன்னைநாள் படைத்தளபதி சரத்பொன்சேகா. இவ்வாறு அவர் உரையாற்றிய இடம் சிறீலங்காவின் நாடாளுமன்றம். விடுதலைவீரர்களின் உயர்வான கட்டுப்பாடுகளும், மேன்மை மிக்க ஒழுக்கவியல் விழுமியங்களும், போரிடும் வீரமும் இன்று என்றுமில்லாதவாறு சிறீலங்காவில் மட்டுமன்றி உலகெங்கும் உணரப்படுகிறது.

இந்த நிலையில் சிறீலங்கா சனாதிபதியின் இத்தகைய கூற்றை நாம் சாதாரணமானதாக எடுத்துவிடமுடியாது. சிறீலங்கா சிங்கள அரசு தமிழரை இல்லாதொழிக்கும் தனது நீண்டகால நிகழ்ச்சி நிரலை பலவழிகளிலும் மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றிவருகிறது. இந்தவகையில் இதுபோன்ற நடவடிக்கைகளும் அந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

# தமிழினத்திற்கு கொள்கையில் பற்றுறுதியான பலமான தலைமையொன்று அவசியம்

## தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் வசந்தராஜா

தமிழினத்திற்கு கொள்கைப்பற்றுறுதியான பலமான தலைமையொன்று அவசியமாகின்றது என்று தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் த.வசந்தராஜா இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். அச்செவ்வியின் இறுதிப்பகுதி வருமாறு,

**சென்ற வார தொடர்ச்சி,**

**கேள்வி:- தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டமிட்ட பௌத்த, சிங்கள மயமாக்கலை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு தமிழ் மக்கள் பேரவை ஏனைய தரப்புக்களுடன் கூட்டிணைந்து எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது?**

பதில்:- தாயகத்தில் தமிழர்களின் இருப்பினையே முதலில் பாதுகாக்க வேண்டியுள்ளது. ஆகவே தாயகத்தில் பௌத்த, சிங்கள மயமாக்கல் நடைபெறுகின்றது என்று கூறுகின்ற அனைத்து தரப்புக்களும் பேதங்களை மறந்து அச்செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்காக முதலில் ஒன்றுபட வேண்டும். இதற்கு நல்லதொரு உதாரணத்தினைக் கூற முடியும். உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கு பின்னரான காலப்பகுதியில் சிறுபான்மை சமூகங்களில் ஒன்றான முஸ்லிம்களுக்கு பெரும்பான்மை தரப்புக்களால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தமானது அவர்களை ஒன்றுபடுத்தியிருக்கின்றது. கேடுகெட்ட காலம் குடும்பத்தை நெருங்க இணைக்கும் என்றொரு பழமொழி உள்ளது.

அதற்கமைவாகவே இந்த பயங்கரவாத தாக்குதலின் பின்னரான காலப்பகுதியில் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து அமைச்சுப்பதவிகளிலிருந்து விலகியிருந்தனர். தற்போது, தனித்தனியாக இருந்த முஸ்லிம் தரப்புக்கள் ஒன்றுபட்டு கூட்டாக தீர்மானித்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். எதிர்காலத்தில் இவர்கள் ஒன்றுபட்டு தம்மினம் சார்ந்த பிரதிநிதித்துவங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறான நிலைமையொன்று சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்குள் ஏற்படுகின்றபோது ஏன் தமிழ் மக்கள் பிரதிநிதிகள், அரசியல் தலைமைகள் மத்தியில் ஏற்படக்கூடாது என்பது தான் கிழக்கு மாகாண மக்களின் மனக்கிடக்கையாக உள்ளது.



தமிழ் மக்கள் பேரவை என்பது சிவில் அமைப்பொன்றாகும். அது அதிகாரங்களைக் கொண்ட அரசியல் கட்சியல்ல. சிவில் அமைப்பென்ற வகையில் தனது முயற்சிகளை பேரவை எடுத்தே வருகின்றது. இருப்பினும் அரசியல் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் ஏனைய அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதன்மூலம் சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளால் எமது இருப்பினை கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளுக்கு முதற்கட்டமாக தடையை போட முடியும்.

**கேள்வி:- ஒட்டுமொத்த தமிழ் தரப்புக்களின் அடுத்தகட்டச் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

பதில்:- அரசியல் தரப்புக்கள் ஒன்றிணைவதற்கான சிறந்தவொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. காரணம், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி கூட்டமைப்பினை டெல்லிக்கு அழைத்திருக்கின்றார். தற்போதைய நெருக்கடியான சூழலை புரிந்து கொண்டு அனைத்து அரசியல் தரப்புக்களையும் ஒன்றிணைத்து அடுத்த கட்டம் தொடர்பான உரிய கலந்துரையாடல்களைச் செய்ய வேண்டும். அதனைவிடுத்து தனித்து இயங்க முயல்கின்றபோது காரியங்கள் கைகூடுவது சந்தேகம் தான். அரசியல்வாதிகள், தமது சுயவிருப்பில் தீர்மானங்களை எடுத்து தனித்தனியாக பிரிந்து நிற்கின்றபோது, பொதுமக்களின் பங்களிப்பு, புத்திஜீவிகளின் பங்களிப்பு என எதுவுமே முழுமையாக பெறமுடியாத சூழலே தோற்றம் பெறும். இது தமிழ் மக்களின் எதிர்காலத்தினை ஆபத்திற்குள் தள்ளிவிடும்.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு பேருக்கு சொந்தமான கட்டமைப்பு அல்ல. தமிழ் மக்கள் பலவீனமான தலைமையொன்றை விரும்பவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தோ அல்லது தமிழ் மக்கள் கூட்டணியிலிருந்தோ பலமான கொள்கையில் பற்றுறுதியான தலைமையொன்றையே எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே அவ்விதமான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலான கரிசனைகளையே கொண்டிருக்கவேண்டும். வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயா தற்போது தான் கட்சியை உருவாக்கியுள்ளார். கொள்கை ரீதியிலானவர்களை ஒன்றிணைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். அவருக்கான வளங்கள் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. ஆகவே மக்கள் அங்கீகாரம் பெற்றவர்கள் என்று கூறிவரும் கூட்டமைப்பே ஒன்றுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் நழுவிப்போகின்றபோது அது தமிழினத்தின் எதிர்காலத்திற்கு ஆபத்தினையே ஏற்படுத்துவதாக அமையும்.

**கேள்வி:- தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கட்டமைப்பாக செயற்படுவதற்கு தயாரில்லை. கொள்கையிலிருந்து விலகிச் செல்கின்றது. அண்மைய காலங்களில் பேரம்பேசும் சக்தியை இழந்து சரணாகதி அரசியல் நிலைக்குச் சென்றுவிட்டது என்பது தான் அதன் மீதுள்ள விமர்சனமாக உள்ளது. இந்த விமர்சனத்தினையே கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள தமிழ்த் தேசியத் தரப்புக்கள் ஒட்டுமொத்தமாக முன்வைக்கின்றன. இந்த நிலையில் கூட்டமைப்பால் ஒன்றுபடுத்துவதற்கான செயற்பாட்டினை முன்னெடுக்க முடியுமா?**

பதில்:- உலக சரித்திரங்களை எடுத்துப்பார்க்கின்றபோது பிரிந்து நின்றவர்கள் ஒன்றிணைந்து எத்தனையோ காரியங்களை செய்துள்ளார்கள். ஆகவே முடியாது என்று எதுமில்லை. ஆனால் அதற்கான முயற்சிகளும் விட்டுக்கொடுப்புக்களும், மக்கள் நலன்கள் சார்ந்த மனப்பான்மையுமே அவசியமாகின்றது. தமிழர் தரப்பினைப் பொறுத்தவரையில் ஒன்றிணைவதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக எடுக்கப்படாத நிலைமையல்லவா தொடர்கின்றது.

**கேள்வி:- கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் ஏதேச்சதிகார போக்கினால் தான் தமிழ்த் தேசிய அரசியல் பலவீனமடைந்து வருகின்றதாக விமர்சனங்கள் உள்ள நிலையில் மாற்று தமிழ்த் தேசிய தளம் வலுவடைவதற்கான சந்தர்ப்பங்களை எப்படிப்பார்க்கின்றீர்கள்?**

பதில்:- மாற்று அணி உருவாகுவதில் தவறில்லை. கொள்கைரீதியான அவ்வாறான அணி உருவாக்கப்படவேண்டியது தற்போது அவசியமாகின்றது. எனினும், அத்தகைய அணியொன்று உருவாக்குகின்றபோது, பலவீனங்களையும், விமர்சனங்களையும் கொண்ட தமிழரசுக்கட்சியையும், கூட்டமைப்பையும் அதற்குள் உள்வாங்க வேண்டும் என்ற சிந்தனைகளும் இல்லாமலில்லை. ஏனெனில் தமிழரசுகட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நீண்டகாலமாக

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# கோத்தாவின் கடிவாளம்



## அமெரிக்காவின் கையில் ?

**பூமிகன்**

இலங்கை அரசியலில் இப்போது அனைத்துத் தரப்பினரதும் பார்வை கோத்தபாய ராஜபக்சவின் பக்கமே திரும்பியுள்ளது. இன்றைய தினத்தில் சனாதிபதித் தேர்தல் ஓட்டத்தில் வெற்றிபெறக் கூடிய ஒரே குதிரை என்றால் கோத்தாதான் என்ற கருத்து அனைத்துத் தரப்பினரிடமும் உள்ளது. குறிப்பாக கடும்போக்குள்ள சிங்கள மக்கள் அவரைத் தமது பாதுகாவலனாகக் கருதுகின்றார்கள். அவருக்கிருந்த செல்வாக்கு 21-4 க்குப் பின்னர் மேலும் அதிகரித்திருப்பதையும் காணமுடிகின்றது. சிங்கப்பூரில் சிகிச்சைக்காகச் சென்ற அவர் எப்போது திரும்புவார்? வந்தவுடன் என்ன அறிவிப்பை வெளியிடுவார்? என்பதையிட்டு அனைத்துத் தரப்பினரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள்.

கோத்தாதான் சனாதிபதி வேட்பாளர் என்பதை அவர் சார்ந்த சிறீலங்கா பொது ஜன பெரமுன இன்றுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால், அதனை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளையே பெரமுனவில் காணமுடிகின்றது. ஆகஸ்ட் 11 ஆம் திகதி இதற்கான அறிவிப்பு வெளிவரும் என கட்சி வட்டாரங்கள் சொல்கின்றன. அன்றைய தினத்தில்தான் முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச அந்தக் கட்சியின் தலைமைப் பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவிருக்கின்றார். அந்தத் திகதியிலிருந்து சனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளை பெரமுன ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கலாம்.

கோத்தா களத்தில் இறங்கப்போவதாகக் கூறிக்கொண்டாலும், அவருக்கான 'கடிவாளம்' இப்போதும் அமெரிக்காவின் கைகளிலேயே இருக்கின்றது. கோத்தா



முள்ளிவாய்க்காலில்

களமிறங்கவேண்டுமானால், அமெரிக்க பிரசாவுரிமையைத் துறக்க வேண்டும். அதற்கான விண்ணப்பத்தை அவர் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் ஏற்கனவே கையளித்துவிட்டார். விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதாக தூதரக வட்டாரங்கள் சொல்கின்றன. ஆனால், அதற்கான பதில் எப்போது கிடைக்கும் என்பதற்கு உறுதியான பதில் இல்லை.

ஆனால், கோத்தாவைக் களமிறக்குவதற்கான செயற்பாடுகள் சூடுபிடிக்க, தமது "பரிசீலனை"யை விரைவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்படும் என கோத்தா தரப்பினர் நம்புகின்றார்கள். கோத்தாவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றங்களில் 12 வழக்குகள் இதுவரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் அவரது மகளால் தாக்கல் செய்யப்பட்ட மனு உட்பட இறுதியாக யஸ்மின் சூக்கா தலைமையிலான அமைப்பின் ஆதரவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவரை அனைத்துமே பாரதூரமானவைதான். சனாதிபதித் தேர்தலில் கோத்தா களமிறங்குவதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டவையாகவே இந்த மனுக்கள் உள்ளன என்பதிலும் சந்தேகமில்லை.

இந்த மனுக்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு கோத்தாவுக்கான குடியுரிமையை ரத்துச் செய்வதை அமெரிக்கா தாமதப்படுத்தலாம் என்று ஒரு கருத்துள்ளது. இந்த மனுக்களைத் தாக்கல் செய்தவர்களும் அவ்வாறுதான் எதிர்பார்க்கின்றார்கள். கோத்தா களமிறங்குவதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டுதான் இந்த வேளையில் ஒரேயடியாக 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால், அவ்வாறு தாமதப்படுத்தி கோத்தா போட்டியிட முடியாத ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டால், அமெரிக்காவுக்கு எதிரான ஒரு எதிர்ப்பு அலையை ராஜபக்ச தரப்பு உருவாக்கிவிடலாம் என்பதிலும் அமெரிக்கா அவதானமாக இருக்கும். அது ஐ.தே.க. தரப்பில் போட்டியிடுபவரைப் பாதிக்கும். அதனால், இந்த விவகாரத்தை அமெரிக்கா நிதானமாகவே கையாள வேண்டியிருக்கும் என இராசதந்திர வட்டாரங்களில் ஒரு கருத்துள்ளது.

வாசிங்டனிலிருந்து இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமெரிக்கா வெளிவிவகார அமைச்சின் உயர் மட்டக்குழு இப்போது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் முக்கிய அரசியல் தலைவர்கள், அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இதன்போது பேசப்பட்டாலும், நடைபெறப்போகும் சனாதிபதித் தேர்தல் - கோத்தாவின் குடியுரிமைப் பிரச்சினை போன்றன குறித்தும் முக்கியமாக ஆராயப்படுகின்றது. கோத்தாவுக்கான ஆதரவு எப்படியுள்ளது என்பதை இந்தச் சந்திப்புக்களின் போது அவர்கள் அறிந்துகொள்ள முற்படுகின்றனர். மறுபக்கத்தில் "அவரது குடியுரிமைப் பிரச்சினை" தீர்க்கப்பட்டுவிடுமா என்பதை அமெரிக்க குழுவினரிடமிருந்து அறிந்துகொள்ள அரசியல் தலைவர்கள் முற்படுகின்றார்கள். குடியுரிமையைத் துறப்பதற்கான விண்ணப்பத்தை அவர் கையளித்துவிட்டாலும், இன்னும் அதற்குச் சாதகமாகப் பதிலளிக்கப்படவில்லை.

கோத்தாவைப் பொறுத்தவரையில் பல தடைகளையும் தாண்டித்தான் இந்தத் தேர்தலில் அவர் களமிறங்க வேண்டியிருந்தது. முதலில் - குடும்பம், உட்கட்சிப் பிரச்சினை, சர்வதேசப் பிரச்சினை - அதாவது அமெரிக்க விவகாரம் என பல தடைகளை அவர் ஒவ்வொன்றாகத் தாண்டவேண்டியிருந்தது.

குடும்பத்தில் அவருக்குத் தலையசைத்துவிட்டாலும், முழு அளவிலான ஒத்துழைப்பு கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான் என்கிறார்கள் தகவலறிந்தவர்கள். தேர்தல் களத்தில் இறங்குவதற்கான வேலைகளைப் பாரிய அளவில் கோத்தா ஆரம்பித்துவிட்ட நிலையில் குடும்பத்தினால் அதனைத் தடுக்கமுடியவில்லை. அதனைவிட குடும்பத்தில் அவரைவிட பலமான ஒருவர் இல்லை என்பதும் அவரது கோரிக்கைக்கு தலையசைக்க வேண்டிய நிர்ப்பந்தம் குடும்பத்தினருக்கு ஏற்பட்டமைக்கு காரணம். கூட்டு எதிரணியில் வாசு, திஸ்ஸ குழுவினர் கோத்தாவுக்கு எதிரான நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார்கள். அவர்களையும் ஒவ்வொருவராக அழைத்துப்பேசி தலையசைக்க வைத்துவிட்டார் கோத்தா.

அதாவது, குடும்பம் - கட்சி என்ற இரு தடைகளையும் அவர் தாண்டிவிட்டார். மூன்றாவது தடையாக இருப்பது அமெரிக்க குடியுரிமைப் பிரச்சினைதான். குடியுரிமைப் பிரச்சினையைக் கையாள்வதிலும் அமெரிக்காவுக்குச் சில அழுத்தங்கள் நிச்சயமாக இருக்கின்றது. அதனை இலக்காகக் கொண்டுதான் இந்தனை வழக்குளும் அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விடயத்தை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் கண்காணித்துக்கொண்டுள்ளன. அமெரிக்காவிலிருந்து யாழ். சென்ற உயர் குழுவை சந்தித்த சி.வி. விக்கினேஸ்வரன்கூட, கோத்தாவுக்கு எதிராக பல வழக்குகள் அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அமெரிக்க குடியுரிமையை வாபஸ் பெறுவதோ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதோ அவருக்கு சாத்தியமாகாது எனக் கூறியிருக்கின்றார். ஆனால், கோத்தாதான் சனாதிபதி வேட்பாளர் என்ற வகையிலான பிரச்சாரங்கள் அரசியலரங்கில் சூடாகப் பேசப்படுகின்றது. கோத்தாவின் முடிவு ஐதேக எடுக்கப்போகும் முடிவிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆக, இலங்கையின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக அடுத்த மாதம் அமையும்.

# விடுதலைப் புலிகளின் தடையை நீக்க கோரி
## சனநாயக போராளிகள் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு கோரிக்கை

சனநாயகப் போராளிகள் கட்சிக்கும் அமெரிக்காவின் வெளிவிவகார செனட் பிரதிநிதிகளுக்குமிடையிலான உயர்மட்ட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற இந்த சந்திப்பில் மாறி வருகின்ற தேசிய மற்றும் சர்வதேச அரசியல் நிலைமாற்றங்கள் தொடர்பாக பேசப்பட்டது.



இலங்கையின் ஏப்ரல் 21 தாக்குதல்கள், தெற்கின் சமகால அரசியல் காய்நகர்த்தல்கள், அரசியலமைப்புப் பொறிமுறை மற்றும் தமிழர்களுக்கான சாத்தியப்பாடான தீர்வுகள் சம்பந்தமான சனநாயகப் போராளிகளின் நிலைப்பாடு தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதாக சனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தீர்வு முயற்சிகள் தொடர்பாக அரசியலமைப்புப் பொறிமுறைகளில் தமக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனங்களை அமெரிக்கத் தூதுக்குழுவிடம் சனநாயகப் போராளிகள் எடுத்துரைத்தனர்.

அமெரிக்க மற்றும் இந்தியாவின் இடையீட்டு முயற்சிகளூடாக கொண்டுவரப்படுகின்ற 13ஆவது திருத்தச்சட்ட ஏற்பாடுகளின் நடைமுறைகள் புரையோடிப்போயிருக்கின்ற தமிழரின் தேசிய இனப் பிரச்சனைக்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொள்ளும் ஓர் திருப்புமுனைக்கு தாம் வந்துள்ளதாக சனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

# ஞானசார தேரரின் பொது மன்னிப்பை ரத்து செய்யக் கோரி ஜெனீவாவில் மனு

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக தெரிவித்து பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரருக்கு எதிராக வெளிநாட்டிலுள்ள முஸ்லிம் புலம்பெயர் அமைப்பொன்றினால் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. சுவிஸ்லாந்திலுள்ள எஸ்.ரி.பீ. எனும் பெயரில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்பொன்றின் பெயரில் இந்த முறைப்பாட்டை மனித உரிமைகள் அமைப்பில் முன்வைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டில் குறித்த தேரருக்கு வழங்கப்பட்டுள்ள சனாதிபதி பொது மன்னிப்பை நீக்குமாறு கோரப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஏப்ரல் 21 தாக்குதல் ஒரு பயங்கரவாத நடவடிக்கை எனவும் இந்த தாக்குதலின் பின்னரான நடவடிக்கைகளிலிருந்து கிறிஸ்தவ மக்களையும் முஸ்லிம்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய தேசிய சகோதர ஊடகமொன்று அறிவித்துள்ளது.

5 ஆம் பக்க தொடர்ச்சி →

# இலங்கையின்

வெளியிருந்து மேற்கொள்ள முடியும். அது தான் சாத்தியமானதொரு வழியாக இருக்கின்றது.

**கேள்வி :- மாவட்ட நீதவான் நீதிமன்றம் போதிய ஆதாரங்கள் இல்லையென்று கூறுகின்ற நிலையில் தங்களிடத்தில் எத்தகைய ஆதாரங்கள் இருக்கின்றன?**

பதில்- என்னிடம் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. எனது மகனை தொலைத்துவிட்ட நிலையில் தற்போது பாதிக்கப்பட்ட ஒரு தரப்பாக இருக்கும் என்னையும் நீதிமன்றம் தீர்ப்பளிக்க முன்னதாக அழைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. இதன்மூலம் அரசியல்வாதிகளின் பிடியில் நீதித்துறை இருக்கின்றது என்பதையும்



அரசியல்வாதிகளின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டே நீதித்துறை செயற்படுகின்றது என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாக காட்டுகின்றது.

**கேள்வி :- அவற்றை பயன்படுத்தி தாயகத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை களை உள்நாட்டில் முன்னெடுக்க முடியுமா?**

பதில்-என்னிடம் ஆதாரங்கள் இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாது. காரணம், உள்நாட்டில் நாம் இத்தகைய விடயங்களை முன்வைத்து நீதித்துறையை நாடுகின்றபோது எமது பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எழுகின்றது.

ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு இழுத்தடிப்புக்கள் செய்யப்பட்ட தருணங்களில் எல்லாம் இந்த கொடூரம் தொடர்பான அநேகமான சாட்சிகள் தமது பாதுகாப்பு நிமித்தம் தற்போது நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு அவர்களிடத்தில் நீதியை எதிர்பார்க்க முடியும்.

9 ஆம் பக்க தொடர்ச்சி →

# தமிழினத்திற்கு கொள்கை பற்றுறுதியான

செயற்பட்டு வருவதாகவே பொதுமக்கள் கருதுகின்றனர். ஆகவே அக்கட்சியின் பலவீனத்தன்மையை உணர்ந்து மாற்று அணியில் உள்வாங்குவது தமிழ் மக்களுக்கே நன்மை பயப்பதாக இருக்கும்.

**கேள்வி:- வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் கிழக்கு வாழ் தமிழர்களின் நிலைப்பாடு என்ன? எதிர்காலத்தில் தமிழர் தாயகம் ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதெனக் கருதுகின்றீர்களா?**

பதில்:- கிழக்கில் ஒருசில சிறு தமிழ் குழுக்கள் வடக்குடன் கிழக்கு சேரக்கூடாது என்ற மனநிலையிலும் இருக்கின்றார்கள். பெரும்பாலான தமிழர்களின் விருப்பம் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு ஒன்றிணைந்து சமஷ்டி ஆட்சி உருவாக வேண்டும் என்பதே ஆகும். ஆனால், இஸ்லாமிய சமூகத்திடம் வடக்குடன் இணைவது தொடர்பான விடயத்தில் எதிர்மறையான சிந்தனையையே கொண்டிருக்கின்றார்கள். வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் என்றால் ஆகக்குறைந்தது ஒருமொழிபேசுகின்ற இரு சமூகங்களும் முதலில் ஒற்றுமைப்பட வேண்டியுள்ளது.

ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் இரு சமூகங்களிடையே மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனையும் தாண்டி இரு சமூகங்களும் ஒன்றுபட வேண்டும் என்றால் இருதரப்பிற்கும் இடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக தாக்குதலின் பின்னர் இஸ்லாமியர்களைப் பார்த்து தமிழர்கள் அச்சப்படும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. இவ்வாறான அச்சமான சூழல் நிலவுகின்றபோது எவ்வாறு இரு சமூகங்கள் ஒன்றுபட முடியும் என்ற கேள்வியும் உள்ளது. ஆகவே அச்சத்தினை உருவாக்கும் சமூகமான இஸ்லாமிய சமூகமே அதனை போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வெண்டும்.

மேலும் முஸ்லிம்கள் வடக்கும் கிழக்கும் இணைவதற்கு விரும்பாத சூழலில் அதனை தாண்டி வடக்குகிழக்கினை இணைப்பதற்கான அணுகுமுறைகளை கையாள வேண்டியுள்ளது. இராசதந்திர ரீதியான நகர்வுகளைச் செய்ய வேண்டியுள்ளது. முஸ்லிம்களுக்கான தனியலகினை வழங்கியாவது வடக்கும் கிழக்கும் இணைந்தால் தான் தமிழர்களுக்கு விமோசனம் கிட்டும். அதற்கான யுக்திகளை தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து வகுக்க வேண்டும்.

**கேள்வி:- கூட்டமைப்பு 'மாமா வேலை' பார்க்க கூடாது என்று மிகக்கடுமையாக நீதியரசர் விக்கினேஸ்வரன் விமர்சித்துள்ள நிலையில் பிரதான தலைவர்களுக்கு இடையிலான இடைவெளி பகிரங்கமாகின்றதல்லவா?**

பதில்:- ஆம், விக்கினேஸ்வரன் ஐயா, நல்லெண்ணங்களையும், சிந்தனைகளையும், யதார்த்தங்களையும், தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாடுகளையும் கொண்டவர். தமிழ் மக்களின் உள்ளத்து வலிகளையும் மக்கள் மீதுள்ள அதீத அக்கறையின் வெளிப்பாடாக அந்த வார்த்தையை அவர் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் தமிழ்த் தலைவர்கள் தமக்குள் முரண்பாடுகளை வளர்க்காது கொள்கைப்பற்றுடன் மக்களின் உரிமைக்காக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் மனநிலையாகின்றது. இதனை அவர்கள் புரிந்து செயற்பட வேண்டும்.

முற்றும்

# இலங்கை அரசாங்கத்தின் அழைப்பினை நிராகரித்தது கனடா

இலங்கைக்கு வருகை தருமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை கனேடிய பிரதமர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு கனேடிய பிரதமரிடம், சனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், அவரின் அழைப்பினை கனேடிய பிரதமர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒரு நாட்டின் அரச தலைவர், மற்றுமொரு நாட்டுடன் நெருங்கிய உறவுகளை பேணும் நோக்கில், மற்றைய நாட்டின் அரச தலைவருக்கு உத்தியோகபூர்வ விஜயத்திற்கான அழைப்பை விடுப்பதே வழமை. இதற்கான தகவல் பரிமாற்றங்கள் வெளிவிவகார அமைச்சு மற்றும் தூதரகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். இந்த அழைப்பை



ஏற்றுக்கொள்வது அல்லது திகதிகள் சம்பந்தமான பிரச்சினை இருந்தால், அழைப்பு விடுத்த தலைவரை தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுப்பது வழமையான நடைமுறை. எனினும் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை கனேடிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் தமது நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு மைத்திரிபால சிறிசேனவிற்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

# தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் மாநாட்டில் அலைகடல் என திரண்ட மக்கள்

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் முதலாவது தேசிய மாநாடு நேற்று (சனிக்கிழமை) மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் இந்த மாநாட்டில், வட. மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். தொடக்க நிகழ்வாக உலக தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவிடத்தில் கொல்லப் பட்டவர்களுக்கான அஞ்சலியுடன் மாநாடு ஆரம்பமானது. இதில் பிரபல அரசியல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டதுடன், மாநாட்டில் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டிருந்தனர்.





# அரசிடம் சோரம் போயுள்ளது கூட்டமைப்பு

## பொ. ஐங்கரநேசன் காட்டம்



தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் பேரம் பேச வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், அரசிடமிருந்து பணத்தைப் பெற்று சோரம் போயுள்ளதாக வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டதாக பெருமிதம் கொள்ளும் கூட்டமைப்பின் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் கொள்கைகளை உதாசீனம் செய்துள்ளதாகவும் அவர் சாடியுள்ளார்.

வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் உருவாக்கப்பட்ட தமிழ்தேசிய பசுமை இயக்கத்தின் முதலாவது தேசிய மாநாடு நேற்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டப த்தில் இடம்பெற்றது.மாநாட்டில் தமிழ்தேசிய பசுமை இயக்கத்தின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய ஐங்கரநேசன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் விசனம் வெளியிட்டார்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயக பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மறைமுக யுத்தம் ஒன்று அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# கைதிகளுக்கு கைத்தொலைபேசி வழங்கிய காவல்துறையினர் பணி இடை நிறுத்தம்.

சிறீலங்கா சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு கைத்தொலைபேசிகளை பெற்றுக் கொடுத்த குற்றச்சாட்டில் விசேட அதிரடிப்படையினர் நால்வர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.



அக்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினரில் நால்வர் இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் விரைவில் வெளியேற்றம் - டிரம்ப் அறிவிப்பு



அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றுவதில் அந்த நாட்டின் சனாதிபதி டிரம்ப் உறுதியாக உள்ளார். இந்தப் பிரச்சினையை அவர் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளார். இதற்கான நடவடிக்கையை தொடங்க இருந்த அவர் கடந்த மாதம் ஒத்தி வைத்தார். இந்த நிலையில் சட்ட விரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கை விரைவில் தொடங்கி விடும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையொட்டி வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் டிரம்ப் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறும்போது "அவர்கள் விரைவில் வெளியேற்றப்படுவார்கள். பல்லாண்டு காலமாக சட்ட விரோதமாக குடியேறிய மக்களைத்தான் நாங்கள் அகற்றுகிறோம்" என குறிப்பிட்டார்.

ஆனால் புலம் பெயர்ந்தோர் உரிமை குழுக்கள் டிரம்பின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது குறித்து அந்த



குழுக்கள் குறிப்பிடுகையில் "இந்த பொதுவான அச்சுறுத்தல் சமூகங்களுக்கும் அமெரிக்க பொருளாதாரத்துக்கும் கேடு விளைவிக்கும். ஏனென்றால் பெரியவர்கள் வேலைகளை இழக்கவும் குழந்தைகள் பள்ளிகளை தவிர்க்கும் சூழலும் உருவாகும்" என்றன.

# தனிமையில் 10 கோடி பெண்கள்

ஐ.நா.வின் பெண்கள் அமைப்பு 'உலக பெண்களின் முன்னேற்றம் 2019-20' என்ற தலைப்பில் சமீபத்தில் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் இந்தியாவில் 4.5 சதவீத குடும்பங்கள் தனிமையில் வசிக்கும் தாயாரின் தலைமையில் நிர்வகிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. அதாவது ஒற்றை பெற்றோர் எனப்படும் குடும்ப நிர்வாகத்தில் பெண்கள்தான் கடும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். கணவன் உயிரோடு இல்லாமலோ அல்லது கணவனால் கைவிடப்பட்ட நிலையிலோ இருக்கும் இத்தகைய பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குகிறார்கள். குறிப்பாக குடும்ப வருமானத்தை திரட்டுவதும், தனியொரு பெண்மணியாக குழந்தைகளை பராமரிப்பதும் அவர்களுக்கு கடும் சவாலாக விளங்குகிறது.

இந்த ஆய்வறிக்கை, குடும்பங்களின் வெவ்வேறு கட்டமைப்புகள் எந்த அளவுக்கு பெண்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை பகுப்பாய்வு செய்வதாக அமைந்துள்ளது. இந்தியாவில் குழந்தைகளுடன் ஒன்றாக சேர்ந்து வாழும் தம்பதியர்களின் எண்ணிக்கை 46.7 சதவீதமாக இருக்கிறது. கூட்டு குடும்பமாக தொடர்பில் இணைந்து இருப்பவர்களின் எண்ணிக்கை 31.2 சதவீதமாக இருக்கிறது. உலக அளவில் குழந்தைகளுடன் சேர்ந்து ஒருமித்த தம்பதிகளாக வாழ்பவர்களின் எண்ணிக்கை 38.4 சதவீதமாக இருக்கிறது. கூட்டு குடும்ப தொடர்பில் இருப்பவர்கள் 26.6 சதவீதம் என்ற அளவிலேயே இருக்கிறது. அதேவேளையில் உலக அளவில் கணவன்- மனைவி இருவரும் பிரிந்து வாழும் பட்சத்தில் 10 குடும்பங்களில் 8 குடும்பங்கள் பெண்களால்தான் நிர்வகிக்கப்படுகிறது. அதன்படி உலக அளவில் 10 கோடி குடும்பங்களில் பெண்கள் தனிமையில் வசிப்பதோடு குழந்தைகளை பராமரிக்கும் முக்கிய பொறுப்பையும் சுமந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவை பொறுத்தவரை தனிமையில் குழந்தையை வளர்க்கும் பெண்களின் சதவீதம் 4.5 ஆக



இருந்தாலும் எண்ணிக்கை அடிப்படையில் சுமார் ஒரு கோடி என்ற அளவில் இருக்கிறது. 89 நாடுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த கள ஆய்வு எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐ.நா பெண்கள் அமைப்பின் துணை நிர்வாக இயக்குனர் அனிதா பாத்யா கூறுகையில், ''ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பெண்களின் வாழ்க்கையில் சில முன்னேற்றங்கள் தென்பட்டாலும் பாகுபாடு காட்டப்படும் நிலை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக மதிப்பிடப்படுகிறது. பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்திற்குதான் முக்கிய கடமை இருக்கிறது. 2030-ம் ஆண்டுக்குள் இலக்கை எட்டும்விதமாக அவிபிருத்தி பணிகளை மேற்கொண்டு பெண்களின் நிலையை மேம்படுத்த வேண்டும்'' என்கிறார்.

# 900 ஆண்டுகள் பழைமை வாய்ந்த செஸ் நாணயம்.. 1.3 மில்லியன் டொலருக்கு ஏலம்!

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஆன்ட்டிக் பொருள் வியாபாரியின் அலுமாரியில், 900 ஆண்டுகள் பழைமைவாய்ந்த இடைக்கால செஸ் நாணயம் ஒன்று தற்போது கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டனிலுள்ள அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான Sotheby's, இந்த செஸ் நாணயத்தை 1.3 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் எடுத்துள்ளது.

1964-ம் ஆண்டு, இந்த 'வைக்கிங்' சகாப்தத்தின் மிகப் பெரிய கலைப்பொருள்களுள் ஒன்றான லூயிஸ் செஸ்மென் நாணயம் (Lewis Chessmen piece), ஐந்து பவுண்டிற்கு வாங்கப்பட்டிருக்கிறது. 'லூயிஸ் செஸ்மென்' என்பது 93 நார்ஸ் (Norse - வடக்கு ஜெர்மானியர்கள்) போர் வீரர்களின் வடிவத்திலான நாணயங்களின் சேகரிப்பு. இவற்றில் பெரும்பாலான நாணயங்கள், 12-ம் நூற்றாண்டின் வால்ரஸ் தந்தங்களால் செதுக்கப்பட்டவை.

பல நூறு வருடங்களுக்குப் பிறகு, 1831-ஆம் ஆண்டு, ஸ்காட்லாந்தின் Isle of



Lewis பகுதியின் மணல் மேட்டில் இந்தக் கோர்வை நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. பிறகு அவற்றை, லண்டனிலுள்ள 'பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலும்', எடின்பர்க்கிலுள்ள 'ஸ்காட்லாந்து தேசிய அருங்காட்சியகத்திலும்' பிரித்து வைக்கப்பட்டன. எனினும் 93 நாணயங்களில், ஐந்து நாணயங்கள் கண்டுபிடிக்கமுடியாமல் போனது. தற்போது கிடைத்துள்ள நாணயம் 8.8 செ.மீ உயரமுடையது.

இதன் மதிப்புத் தெரியாமலேயே, சுமார் 55 ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாய் ஓர் ஆன்ட்டிக் வியாபார குடும்பத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அந்நாட்டுப் பத்திரிகையாளரோடு பேசிய அக்குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர், "என் தாத்தா எடின்பர்கைச் சேர்ந்த ஆன்ட்டிக் வியாபாரி. அவர் 1964-ம் ஆண்டு, இந்த ஐவரி செஸ்மென் நாணயத்தை வேறொரு ஆன்ட்டிக் வியாபாரியிடமிருந்து வாங்கியிருக்கிறார். இதை அவருடைய கொள்முதல் லெட்ஜரில், 'பழங்கால வால்ரஸ் டஸ்க் வாரியர் செஸ்மேன்' வாங்கியதாகப் பட்டியலிட்டிருக்கிறார். பிறகு எங்கள் வீட்டிலுள்ள அலுமாரியில் இத்தனை ஆண்டுகளாக இருந்தது" என்று கூறினார். '55 ஆண்டுகள் பழைமைவாய்ந்த செஸ் நாணயம் என்றுகூறி விற்கச் சென்ற எடின்பர்க் குடும்பத்தினருக்கு மிகப் பெரிய அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது' என்று மக்கள் அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்துள்ளனர். மேலும், இந்த நாணயத்தை வாங்கிய Sotheby's நிறுவனத்தின் முதன்மை நிபுணரான அலெக்ஸ்சாண்டர் காதர், '' இந்தக் கண்டுபிடிப்பு என் பணி வாழ்க்கையில் நான் பார்த்த தனிப்பட்ட கண்டுபிடிப்புகளில் மிகச் சுவாரஸ்யமான ஒன்று" என்று அந்நாட்டு செய்தியாளர்களிடம் கூறி பூரித்துள்ளார்.

# புளிக்கும் தக்காளிக்குப் பதில் இனி காரமான தக்காளியா?

சமையலுக்கு பயன்படுத்தப்படும் தக்காளி பழத்தின் நிறமும். சுவையும் மாறாமல் அதன் புளிப்பு சுவையை காரமாக மாற்றி அறிவியல் ஆய்வாளர்கள் புதிய சாதனை படைத்துள்ளனர்.

அண்மைய காலமாக மரபணு பொறியியல் தொழில்நுட்பங்கள் பிரபலமாகி வருகிறது. அனைத்து விதமான தாவரங்களிலும் விலங்குகளிலும் கூட சிறிய மரபணு திருத்தங்களை செய்வது சாத்தியம் என்பதை அவ்வப்போது ஆய்வாளர்கள் நிரூபித்து வருகின்றனர். அந்த வகையில் தக்காளி பழத்தை மரபணு மாற்றம் செய்து பிரேசில் நாட்டை சேர்ந்தவர்கள் புதிய சாதனையை படைத்துள்ளனர்.

தக்காளி என்றால் பிடிக்காதவர்கள் யாருமில்லை. அதற்கு காரணம் அதன் புளிப்பு சுவை தான். குழந்தைகளை கவரும் வகையில் இன்றைய தக்காளிகளின் வடிவம் உருமாறி சாஸ் வடிவில் பாட்டில்களில் கிடைப்பதுண்டு. சருமத்திற்கும் உடலுக்கும் நல்ல மருத்துவகுணம் கொண்ட பழமாக பார்க்கப்படும் தக்காளியின் மரபணுவில் சில மாற்றங்களை ஆய்வாளர்கள் செய்துள்ளனர்.



தனக்கே உரிய புளிப்பு குணத்தைக்கொண்ட தக்காளியின் வடிவத்தை மாற்றாமல் சுவையை மட்டும் காரமாக மாற்றி புதிய சாதனை படைத்துள்ளனர்.

'CRISPR' முறையில் மரபணுக்களை மாற்றவோ அகற்றவோ முடியும் என்பதால் இந்த முறையை பயன்படுத்தி தக்காளிக்குள் கேப்சைசின் என்ற வேதிப்பொருளை உட்புகுத்த முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள். கேப்சைசின் என்பது மிளகுகளில் காரம் தரும் பொருளாகும். லான்ட் சயன்ஸ் எனும் இதழில் வெளியிடப்பட்டு உள்ள ஒரு ஆய்வின்படி மரபணு பொறியியல் நுட்பங்களைப் பயன்படுத்தி ஜீன் எடிட்டிங் முறையில் தக்காளியினுள் காப்சைசின் மூலக்கூறுகளை உற்பத்தி செய்ய முடியும்.


தக்காளியினுள் காப்சைசின் பொருட்கள் சேர்ந்தால் தக்காளி காரசக்தியினை பெறும். இதனால் தக்காளியினுள் ஆன்டிஆக்சிடன்கள் அதிகரிக்கும். இது உடல்வலியை குணப்படுத்தும் நிவாரணியாக பார்க்கப்படுகிறது. மேலும் உடல் எடை குறைப்புக்கு ஆன்டிஆக்சிடன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த ஜீன் எடிட்டிங் முறையில் மிளகின் நன்மைகளை தக்காளியினுள் புகுத்த முடியும். இது சாத்தியமாகும் பட்சத்தில் ஒரே பழத்தில் புளிப்பு காரம் கொண்ட இரு சுவைகளை கொண்டுவரமுடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

# எலியில் இருந்து எச்.ஐ.வி கிருமியை முற்றிலும் அகற்றி அமெரிக்க பல்கலைக்கழக மருத்துவர்கள் சாதனை!

உயிர்க்கொல்லி கிருமியாக அறியப்படும் எச்.ஐ.வி. கிருமியை அழிக்கும் மருந்தை கண்டறிய, உலகம் முழுவதும் பல ஆராய்சிகள் நடந்து வரும் நிலையில், அதற்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது. மனித உயிருக்கு எமனாக வரும் இந்த அபாயகரமான நோய் முதன் முதலில் 1981-ம் ஆண்டில் (டிசம்பர்) கண்டறியப்பட்டது. 1983-ல் பாரிஸ் நாட்டை சேர்ந்த லுக் மாண்டேக்னியர் என்ற ஆய்வாளரும் மற்றும் அமெரிக்காவில் உள்ள ராபர்ட் கேலோ என்ற ஆய்வாளரும் எய்ட்ஸ் நோய்க்குரிய வைரசினை தனித்தனியாகக் கண்டறிந்தனர். 1986-ல் இந்த வைரசுக்கு மனிதன் முயன்று பெற்ற நோய் என்றும் எதிர்ப்பாற்றல் தேய்வு என்றும் பெயரிட்டனர்.

எச்.ஐ.வி (Human Immunodeficiency Virus) எனும் உயிர்க்கொல்லி கிருமி பாலியல் உறவு, ரத்தப்பரிமாற்றம் போன்றவற்றால் மனிதர்களுக்கு இடையே பரவுகிறது. எச்.ஐ.வி தொற்று கிருமிகள் உள்ளவர்களுடன் பாதுகாப்பற்ற முறையில் உடல் உறவு கொண்டால் அவர்களுக்கு எய்ட்ஸ் நோய் தொற்றி விடுகிறது. 80 சதவீதம் பேருக்கு எய்ட்ஸ் நோய் வர இதுவே காரணமாகும். 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்தான் எய்ட்ஸ் நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எய்ட்ஸ் கிருமியின் அணுகுமுறை சாதாரண நோய்க் கிருமிகளிலிருந்து மாறுபடுகிறது, எச்.ஐ.வி கிருமி உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி செல்களை முதலில் தாக்குகிறது. பின்னர், நாட்கள் செல்லச்செல்ல ஜீன்களில் கிருமியானது கலந்துவிடுகிறது. அந்த வைரஸ் நேரடியாக தற்காப்பு வெள்ளை அணுக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை



தடுத்து நோய் எதிர்ப்பு ஆற்றலை முற்றிலுமாகச் சீர்குலைப்பதுதான் அதன் தீவிர பண்பாகும். இது எப்படி என்றால் நமது நாட்டை காக்கும் காவலர்களை முற்றிலுமாக அழித்துவிட்டால் நிலைமை என்ன ஆகும். மக்கள் பாதுகாப்பை இழந்து விட்ட நிலையில் யார் வேண்டுமானாலும் என்ன தீங்கு வேண்டுமானாலும் செய்து நம்மை அழித்து விடமுடியும். எய்ட்ஸ் கிருமிகள் நமது நோய் எதிர்ப்புச் சக்தியை முற்றிலும் அழித்துவிட்ட நிலையில் ஒரு சாதாரண காய்ச்சல் மற்றும் தொற்றுநோய் கூட நமது உயிரை பலிவாங்கி விடும்.

எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்த தற்போது வரை மருந்துகள் கண்டறியப்படவில்லை. உலகம் முழுவதும் பல ஆராய்ச்சியாளர்கள் இதற்காக கடுமையாக முயன்று வருகின்றனர். இந்நிலையில், அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில், எலியில் இருந்து எச்.ஐ.வி கிருமியை அகற்றி அமெரிக்காவின் நெப்ரஸ்கா பல்கலைக்கழக மருத்துவ மைய ஆராய்ச்சியாளர்கள் சாதித்துள்ளனர்.

எச்.ஐ.வி கிருமியால் பாதிக்கப்பட்ட ஒரு எலியை சோதனைக்குள்ளாக்கி புதிதாக கண்டறியப்பட்ட மருந்தை அதற்கு செலுத்தி, எலியின் ஜீன்-களில் இருந்து எச்.ஐ.வி கிருமியை அகற்றியுள்ளனர். எச்.ஐ.விக்கான தீர்வு கிடைப்பதில் இது முதல் வெற்றி என்று கூறப்படுகிறது.

தற்போது, எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர்கள் ஏ.ஆர்.டி எனும் கூட்டு மருத்துவ சிகிச்சையை எடுத்துக்கொள்கின்றனர். இந்த சிகிச்சை முழுவதும் நோய்த்தொற்றில் இருந்து காப்பாற்றாது என்றாலும், பாதிக்கப்பட்டவர்களில் வாழ்நாளை நீட்டித்து அவர்கள் இயல்பாக வாழ வழி செய்கிறது.

தற்போது, எலிகள் மீதான சோதனையை CRISPR-Cas9 என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜீன்களை மாற்றி அமைப்பது இந்த சோதனையின் முக்கிய அம்சமாகும்.



அறிவியலை புரிந்துகொள்ள, நீங்கள் அறிவியல் பட்டதாரியாக இருக்க வேண்டியதில்லை. அதைப் பற்றி சிந்திக்கும் ஆர்வம் இருந்தால் போதும்.

பில் பிரைசன்,
அறிவியல் நூலாசிரியர்